# <u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம்.</u>

**<u>E.P.No.5/2024</u>**

நாள் 29.08.2025

**<u>RW-1 : குறுக்கு விசாரணை :</u>**

நிறைவேற்று மனுவில் நான் எதிர்மனுதாரர் என்பதால் எனக்கு இந்த நிறைவேற்று மனு குறித்த விவரங்கள் தெரியும் என்றால் சரிதான். இந்த நிறைவேற்று மனுவுக்கு ஆதாரமான அசல் வழக்கு சம்பந்தமான விவரங்கள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த நிறைவேற்று மனுவிற்கு ஆனா அசல் வழக்கில் என் தந்தை முதலாம் பிரதிவாதி நான் இரண்டாம் பிரதிவாதி என்றால் சரிதான். அந்த அசல் வழக்கில் இந்த நிறைவேற்று மனுவின் மனுதாரரின் தந்தை தான் வாதி என்றால் சரிதான். 582/1980 அசல் வழக்கில் இரண்டு சொத்து விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இரண்டு பட்டியல் சொத்து விவரங்களில் ஒன்றாவது அயிட்ட சொத்து வண்டித்தடம் என்று சொன்னால் வண்டித்தடம் இல்லை.

2. உத்தண்டிபாளையம் செல்லும் ரோட்டில் இருந்து மேற்கு நோக்கி ஒரு வண்டித்தடம் செல்கிறது என்றால் சரிதான். பழனிவேலு காடு அறுதி வரை வண்டிதடம் உள்ளது என்றால் சரிதான். குரங்குபள்ளம் கொப்பு வாய்க்கால் பழனிவேல் பூமி வரை உள்ளது என்று சொன்னால் இல்லை. குரங்கு பள்ளத்திலிருந்து தெற்கிலிருந்து வடக்காக மேல்புறமாக வாய்க்கால் உள்ளதா என்றால் இல்லை. அசல் வழக்கு எண் 582/1980ல் நான் வழக்கில் விசாரணைக்கு ஆஜராகினேன் என்றால் சரிதான். நீதிமன்றம் அதில் உத்தரவு வழங்கியது என்றால் தீர்ப்பானை பிறப்பிக்கப்பட்டது என்றால் தெரியாது. மேற்படி வழக்கின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பானையில் வாதி பழனிவேல் தாவா வண்டி தளத்தில் நடந்து கொள்ளலாம் அவருக்கு இடையூறு செய்யக்கூடாது எனவும் ஒரு விளம்புகை பரிகாரம் வழங்கப்பட்டது என்று சொன்னால் தெரியாது.

3. அதேபோல குரங்கு பள்ளம் வாய்க்காலை வாதி பழனிவேல் பயன்படுத்துவதை நான் இடையூறு செய்யக்கூடாது என்று அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுவும் எனக்கு தெரியாது. நிறைவேற்று மனுவில் நான் தாக்கல் செய்துள்ள எதிருரை சம்பந்தமான விவரம் எனக்கு தெரியும். எதிர்உரையில் அசல் வழக்கு 582/1980 சம்பந்தப்பட்ட விவரங்களை நான் குறிப்பிட்டுள்ளது தெரியுமா என்றால் தெரியாது. இந்த நிறைவேற்று

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.08.29 18:22:33 +0530

மனுவில் வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு தாவா சொத்தை பார்வையிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த நிறைவேற்று மனுவில் என்னுடைய வழக்கறிஞர் மற்றும் மனுதாரரின் வழக்கறிஞர் ஆகியோர் முன்னிலையில் வழக்கறிஞர் ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு வரைபடம் மற்றும் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கறிஞர் ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையில் அசல் வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்ப்பாணையில் குறிப்பிடப் பட்டுள்ள உத்தரவுக்கு மாறாக வண்டித்தடம் அழிக்கப்பட்டுள்ளதாக அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. அதேபோல வாய்க்காலும் அழிக்கப்பட்டிருப்பதாக வழக்கறிஞர் ஆணையர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் தவறு. வழக்கறிஞர் ஆணையர் தாக்கல் செய்த அறிக்கைக்கு மறுப்பு தெரிவித்த ஆட்சேபம் தெரிவித்து மனு தாக்கல் செய்தேனே என்றால் எனக்கு வழக்கறிஞர் ஆணையர் சம்பந்தமாக எதுவும் தெரியாது. இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 460/2019 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு பழனிவேல் போட்ட வழக்காகும். அந்த வழக்கில் நான் சாட்சி சொல்லவில்லை. மேற்படி வழக்கில் நான் தான் வாதியாக இருந்து வழக்கு தாக்கல் செய்து எனது தரப்பில் சாட்சி அளிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அசல் வழக்கு எண் 460/2019 வழக்கில் 24.03.2023 அன்று குறுக்கு விசாரணை சாட்சியத்தில்

" உத்தண்டிபாளையம் ரோட்டில் இருந்து மேற்கே வந்து வடக்கு நோக்கி பிரதிவாதி பூமி வரை தடம் செல்கிறது என்றால் சரிதான். R.S.No.744/4 என்ற தடைத்தை பழனிவேல் அனுபவிப்பதை எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் வண்டி வாகனத்தை இருவரும் கொண்டு செல்லலாம்" என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

5. என்மீது பழனிவேலு காவல் நிலையத்தில் தடத்தையும் கால்வாயையும் அழித்துவிட்டதாக புகார் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. தடத்தை நான் பறித்து விட்டதாகத்தான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். போலீசார் வந்து மேற்படி புகாரின் பேரில் வழக்கு சொத்தை பார்த்துவிட்டு அந்த புகார் பொய் என்று கூறி தள்ளுபடி செய்து விட்டார். என் மீது பழனிவேல் கொடுத்த புகாரின்

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.08.29 18:22:49 +0530

பேரில் போலீசார் குற்றவியல் அறிக்கை தாக்கல் செய்து அந்த வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளது என்றால் மேற்படி புகாரானது 2017 ஆம் ஆண்டுக்கு பிறகு கொடுக்கப்பட்டதாகும். அந்த வழக்கு இறுதியாக நான் விடுதலை செய்யப்பட்டேன். பழனிவேலுக்கு சர்வே எண் 744/4 ண்டித்தடத்தை பயன்படுத்துவதற்கு அனுமதி இல்லாததால் அவரால் அவருடைய தோட்டத்திற்கு சென்று விவசாயம் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல. குரங்கு பள்ளத்தில் இருந்து வரும் வாய்க்காலையும் அழித்துவிட்டதால் பழனிவேலு அவருடைய நிலத்திற்கு வாய்க்கால் மூலம் நீர்பாய்ச்ச முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளார் என்றால் தவறு. 5ம் நம்பர் மதகில் சர்வே நம்பர் 744/2 பூமிக்கு குரங்குபள்ளம் வாய்க்கால் தண்ணீர் பாய்ந்து கொண்டிருக்கிறது. அவருக்கு எந்த பாதிப்பும் இல்லை.

6. குரங்குபள்ளம் வாய்க்காலை தற்பொழுது பழனிவேல் நிலத்திற்கு நீர் பாய்வதில்லை அதையும் நான் எனது பூமியோடு சேர்த்து விட்டேன் என்றால் சரியல்ல. நான் வழக்குக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் தெளிவாக நான் மேற்படி தாவா வண்டி தரத்தையும் வாய்க்காலையும் அழித்துவிட்டேன் என்று அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. பழனிவேலு நிறைவேற்று மனு தாக்கல் செய்ததற்கு பிறகுதான் அசல் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நில அளவையர் வந்து வண்டித்தடம் மற்றும் வாய்க்கால் உள்ள பகுதிகளை அளவீடு செய்தார்கள் என்றால் செய்தார்கள். பட்டாவில் அவரவர் பூமிக்கு உரிய பட்டா அவரவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 744/4 வண்டிப்பாதை கணபதி பெயரிலும் பழனிவேல் பெயர்களும் கூட்டாக உள்ளது என்றால் தென்வடல் தளத்தில் இல்லை.

7. கிழமேல் தடத்தில் மட்டும் அவ்வாறு உள்ளது. தாவா வண்டிபாதையில் பட்டாவின் பெயரில் என் தந்தை பெயர் என்னுடைய பெயர் பழனிவேல் பெயர் உள்ளது நான் வழக்குக்காக இல்லை என்று மறுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா 1984லேயே இறந்துவிட்டார். இந்த நிறைவேற்று மனு நடவடிக்கையில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக நான் மனுதாரருக்கு எதிராக அசல் வழக்கு எண் 463/2019 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியில்லை. நான் அசல் வழக்கு எண் 582/1980 வழக்கின் தீர்ப்புரை மற்றும்

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.08.29 18:22:57 +0530

தீர்ப்பாணையை நன்கு தெரிந்து கொண்டு மேற்படி உத்தரவுகளை மீறி நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.08.29 18:23:02 +0530